[1989 மே 6

மருதங்கோட்டில் துணை மின்சார நிலையம்.

206—(* வினா எண். 351) திரு. பொன். விஜயராகவன் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு தாலுகாவில் மருதங்கோடு என்னுமிடத்தில் துணை மின்சார நிலையம் அமைக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, மருதங்கோடு—குழித்துறையில் 110/11 கி. வாட் மின் அழுத்தமுள்ள துணை மின் நிலையத்தை அமைப்பதற்கான நிலத்தினைக் கையகப்படுத்தும் பணி முடிவுறும் நிலையில் உள்ளது.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில், விளவங்கோடு தொகுதியில் கூட பல்வேறு இடங்களில் லோ வோல்ட்டேஜ் பிரச்சினை கடந்த தேர்தல் காலத்திலே இருந்தது. இப்போது அந்தத் துணை மின் நிலையத்திற்கான நிலமே ஆர்ஜிதம் செய்து முடிக்கப்படவில்லை. கடந்த ஆட்சியில் பணம் ஒதுக்கீடு செய்யப்பட்டும் இதுவரையிலும் அந்தத் துணை மின் நிலையம் தொடங்கப்படவில்லை. நில ஆர்ஜிதம் செய்கின்ற போது 8 சென்ட், 10 சென்ட் உள்ள விவசாயிகள் தான், ஏழை விவசாயிகள் தான் தங்களுடைய நிலங்களைக் கொடுத்திருக்கிறார்கள். இப்போது அவர்களுக்குத் தங்குவதற்குக் கூட இடம் இல்லாத காரணத்தால் நிலம் கொடுத்தவர்களுக்கு ஏதாவது வேலை கொடுக்கின்ற உத்தேசம் அரசுக்கு உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திற்கு நிலம் கொடுத்தவர்களுக்கெல்லாம் வேலைவாய்ப்பை உருவாக்கக் கூடிய திட்டம் இருக்கிறது. அந்த விவசாயிகள் எவ்வளவு நிலம் கொடுத்திருக்கிறார்கள் என்பதை அறிந்து அவர்களுக்கு மின் வாரியத்திலிருந்து வேலை கொடுக்கக் கூடிய சாத்தியக் கூறு இருந்தால் நிச்சயமாக அவர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயப் பம்பு செட்டுகளுக்கு மின் கட்டணம்.

207—(* வினா எண். 465) திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1989 மே 6]

விவசாயத்திற்கு ஒரே மின் இணைப்பு எண்ணில் சேஞ்சு ஓவர் சுவிட்சு வைத்து ஓடிக்கொண்டிருக்கும் ஏர் கம்பிரசர் மோட்டார், பம்பு செட்டு மோட்டார் இரண்டில் ஒன்றுக்கு மட்டும் கட்டணம் வசூலிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ஏ. சுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் 500 அடிக்கு மேல் ஆழ்துளைக் கிணறு போட்டு 'ஏர் கம்ப்ரஸ்ஸர்' மூலம் விவசாயத்திற்குத் தண்ணீர் எடுக்கிறார்கள். ஒரே மின் சர்வீஸில் சேஞ்ச் ஓவர் சுவிட்சு வைத்து இருப்பதால் இரு மோட்டார்களும் ஒரே சமயத்தில் இயக்கப்படுவதில்லை. எனவே விவசாயிகள் மீது கருணை கூர்ந்து ஒரு மோட்டாருக்கு மட்டும் கட்டணம் வசூலிக்க அரசு மீண்டும் பரிசீலனை செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே நேரத்தில் மோட்டாரும், கம்ப்ரஸ்ஸரும் ஓடக்கூடிய சாத்தியக் கூறுகள் இருக்கின்ற காரணத்தால் நிச்சயமாக இரண்டு மோட்டார்களுக்கும்தான் பணம் வசூலிக்கப்பட வேண்டும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. சுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே சமயத்தில் இரண்டு மோட்டார்கள் ஓடுவதற்கான சாத்தியக்கூறு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறுகிறார்கள். அப்படி என்றால் மின்னிணைப்புக் கொடுத்தவர்களே சீல் வைத்து விடுகிறார்கள். அது மட்டுமல்ல, ஒரே சமயத்தில் ஒரு மோட்டார் மட்டும் தான் ஓடும். அடுத்து விவசாயத்திற்கு இந்த சேஞ்சு ஓவர் சுவிட்சு வைத்து 'ஏர் கம்ப்ரஸ்ஸர்' மூலம் விவசாயம் செய்ய எவ்வளவு மின் இணைப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன என்பதை நான் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனி வினா தொடுக்கும்படி நான் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் சம்பந்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இங்கே ஒரு அறிவிப்புச் செய்திருக்கிறார்கள். பழைய பாக்கிகள் பூராவையும், அபராதம் இல்லாமல்—அது மட்டுமல்லாமல், லேட்டாகக் கட்டியதற்காகப் போடப்படும் அபராத வட்டி இல்லாமல் வசூல் செய்தல் போதும் என்று சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் இன்றைக்குப்

பல இடங்களில் பணத்தைக் கட்டுவதற்கு அவர்கள் தயாராக இருந்தாலும் கூட மின் இலாக்காவினர் அதனை வாங்காமல் மின்னிணைப்பைத் துண்டித்து விடுகிறார்கள். அதனால் விவசாயம் மிகப் பெரிய பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறது. உதாரணமாக, என்னுடைய கடலூர் கிராமத்தில் சர்வீஸ் எண். 208 கிருஷ்ணம்மாள் என்பவர் பெயரில் உள்ள இணைப்பைத் துண்டித்து இருக்கிறார்கள். எந்தவிதமான முன் தகவல்களையும் கொடுக்காமல் போல்களைப் பிடுங்கிக் கொண்டு சென்றிருக்கிறார்கள். அதை எல்லாம் தடுத்து, அவர்கள் பாக்கியைக் கட்டுவதற்கு அவகாசம் கொடுத்து விவசாயத்தைப் பாதுகாக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்ன காரணத்தினால் நிச்சயமாக அதைப் பற்றி விரைந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்து, நிச்சயமாக இந்த அரசு விவசாயிகளுக்குப் பாதுகாப்பாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். சிவலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சியால் பாதிக்கப்பட்டு கிணற்றில் நீர் இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால் சிறு விவசாயிகள் பாதிக்கப்படுகின்ற காரணத்தினால் விவசாயத்திற்கு வழங்குகிற மின்சாரக் கட்டணம் குதிரைத் திறனுக்கு என்று இருப்பதை மாற்றி மின்சாரம் பயன்படுத்துகின்ற அளவு கட்டணம் வசூலிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வியா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியிலேயே துணைக் கேள்வி.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்வி, அதுதானே இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சிவலிங்கம் அவர்கள், அடுத்த வினாவைப் படிக்கவில்லையோ. உங்களுடைய வினாவிற்கு, அடுத்து பதில் சொல்லப்படும். திரு. உ. ரா. வரதராசனுடைய வினா எண். 208.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY TRUTH ALONE TRIUMPHS